முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்!

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கலைஞர் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி வேண்டுகோள்!



ஈரோடு, ஆக.6-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

தகைசால் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக, இலக்கியவாதியாக, திரைப்பட தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராக தமது பொதுவாழ்வை தொடங்கி பின்னர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று, காஞ்சி தந்த காவியத்தலைவன் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்ற கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அளவில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தனக்கென்று சில பக்கங்களை ஒதுக்கி கொண்ட முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாளையொட்டி (7.8.2025-வியாழக்கிழமை) நாளை காலை 7 மணி அளவில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும், காலை 7:30 மணியளவில் முனிசிபல் காலனியில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளோம்.

அதை தொடர்ந்து ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட மாநகரம், பகுதி, வார்டு, ஒன்றிய, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் ஆங்காங்கே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்தினை வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்

எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

குறிப்பு அனைத்து நிகழ்ச்சிகளையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ம் ஆம் ஆண்டு நினைவு நாள்!

# புதுக்கோட்டையில் அமைதிப் பேரணி! கலைஞர் சிலைக்கு மரியாதை!

## வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஆக.6-

புதுக்கோட்ட வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிளனவு நாள் என்பது மட் டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூநீதி கொள்கைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2023 -வியாழன்) காலை 9.30 மணியளவில் அமைதி ஊர்வலம் புதுக்கோட்டைக்கு கீழ ராஜா வீதி அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு கீழ ராஜ வீதி வடக்கு ராஜ வீதி வழியாக மாவட்ட திமுக அலுவலகம் சென்றடைகிறது. மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் பெருமக்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பொறுப்பாளர்கள், ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், துணைமேயர், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி. பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ம் ஆண்டு நினைவு நாள்!

# நாகை மாவட்டத்தில் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை, ஆக.6-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு நாளான நாளை (7.8.2025) காலை 7.00 மணிக்கு நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி தலைமையில் நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகமான அறிவாலயத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து துய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் அதைத் தொடர்ந்து 7.30 மணிக்கு கலைஞர் பிறந்த திருக்குவளையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது, மேலும் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும், மேலும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் கலைஞர் திரு உருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு முன்னாள், இந்நாள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளில் அஞ்சலி செலுத்திட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.

---

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# தாரமங்கலத்தில் கழகத்தினர் பெரும்திரளாக பங்கேற்று புகழ் அஞ்சலி செலுத்துவீர்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!



ஆகஸ்ட் 7 ஆம் தேதி வியாழக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவுநாள்.

தமிழே மூச்சாக - தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வராற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7 ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரது இல்லத்தின் வாயிலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு - மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு மறைந்தாலும் நம் நெஞ்சங்களிலும், நினைவுகளிலும் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும் தமிழினத் தலைவருக்கு வீடுகள் தோறும் மரியாதை செலுத்திடுவோம்.

07-08-2025 தேதி வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் தாரமங்கலத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுசமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள்-முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), கழக முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஆக.6-

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தின அமைதிப் பேரணி தஞ்சையில் நடைபெற உள்ளதாக தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (07.08.2025-வியாழக்கிழமை காலை 8 மணியளவில் தஞ்சை, கீழவாசல் காமராசர் சிலையிலிருந்து பேரணியாக புறப்பட்டு தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அது சமயம் தலைமைக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் 7வது ஆண்டு நினைவு நாள்!

# தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி - அஞ்சலி!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கை!



தருமபுரி, ஆக.6-

தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் நாளை (ஆகஸ்ட் - 7 - வியாழக்கிழமை) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நகர செயலாளர் நாட்டான் எம்.மாது தலைமையில் ராஜகோபால் கவுண்டர் பேருந்து நிலையத்தில் இருந்து நான்கு ரோடு வரை அமைதி பேரணி நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து கலைஞர் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது. மேலும் மாவட்ட ஒன்றியம், நகரம், பேரூர், வார்டு, கிளை கழகங்கள் தோறும் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்துவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அதுசமயம் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர மன்ற தலைவர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், நகரபேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாற அவர் தெரிவித்துள்ளார்.

---

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ம் ஆண்டு நினைவு நாள்! மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும்

# கலைஞர் சிலைகளுக்கும், திருஉருவ படம் வைத்தும் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மயிலாடுதுறை, ஆக.6 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு நாளான நாளை (7.8.2025) மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மணல்மேடு, மயிலாடுதுறை நகரம் அண்ணா பகுத்தறிவு மன்றம், குத்தாலம் கிழக்கு ஒன்றியம் வழுவூர், கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் சோதியக்குடி, சீர்காழி கிழக்கு ஒன்றியம் செம்பதினிருப்பு ஆகிய 5 இடங்களில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளுக்கு அந்தந்த ஒன்றிய, நகர செயலாளர்கள் கழக நிர்வாகிகளை ஒருங்கிணைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் அமைதி ஊர்வலம் நடத்தியும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், ஏழை, எளியவர்களுக்கு நல உதவிகள் செய்தும், அன்னதானம் செய்தும், மரக்கன்றுகள் நட்டும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கிட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும். இந் நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,, நகர, பேருர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் புகழை போற்றிட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.



திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளால் ஈர்க்கப்பட்ட திருவாரூர் மாவட்டம் கோட்டூர் தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த பெருகவாழ்ந்தான் பகுதியில்உள்ள அறுபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள், ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.தேவதாஸ் முன்னெடுப்பில், தங்களை மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைத்துக்கொண்டனர். பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ஏ.வி. பதி
### ஆகஸ்ட் 6 (1996)



**தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.**

**கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**